# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை - 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 162/ந/2017

ஆணை எண். 252/2017

நாள் : 02/11/2017

திரு அ. சேவியர் ஜோசப்,
காளையார் கோவில்,
சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
சிவகங்கை நகராட்சி. – எதிர் மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் அஞ்சல், சூசையப்பர் பட்டணம், வடக்குத் தெரு, 2/787 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு அ. சேவியர் ஜோசப் அவர்களது 25.07.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 31.07.2017 அன்று பெறப்பட்டு 162/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் அஞ்சல், சூசையப்பர் பட்டணம், வடக்குத் தெரு, 2/787 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு அ. சேவியர் ஜோசப் என்பவர் தனக்கு வழங்கப்பட வேண்டிய கீழ்க்காணும் பலன்களை வழங்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

1) 2015–ஆம் ஆண்டு அக்டோபர் நவம்பர் மற்றும் டிசம்பர் திங்கள்களுக்கான ஊதியம் மற்றும் 2016–ஆம் ஆண்டு ஜனவரித் திங்களுக்கான ஊதியம் ;

2) 2016–ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வழங்கப்படவேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத்தொகை ;

3) 2017–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் விண்ணப்பித்த ஈட்டிய விடுப்புத் தொகை ;

4) சேமநலநிதி மற்றும் பயணப்படி வழங்குதல் ;

5) மருத்துவ விடுப்பு சம்பளம் ;

மேற்குறிப்பிட்ட முறையீடுகள் குறித்து மனுதாரர், எதிர் மனுதாரர் நகராட்சி ஆணையாளர் மற்றும் சிவகங்கை நகராட்சி சுகாதார அலுவலர் ஆகியோரிடம் 26.09.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன. முறையீட்டு மனுதாரர் 2017–ஆம் ஆண்டு மே திங்கள் 22,29,30,31 ஆகிய நாட்களிலும், ஜூன் திங்கள் 7 முதல் 30 தேதி வரையும், ஜூலை 1 முதல் செப்டம்பர் திங்கள் 25 தேதி வரையும் முன் அனுமதியின்றி தகவல் தராமல் பணிக்கு வராமல் இருந்துள்ளார் என்று நகராட்சி ஆணையர் தனது 25.09.2017 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனினும் தனது 27.06.2017 நாளிட்ட கடிதத்தில் முறையீட்டு மனுதாரர் 12.06.2017 முதல் 20.07.2017 வரை மருத்துவ விடுப்பு வழங்கக்கோரி விண்ணப்பித்ததாகவும், மருத்துவக்குழு மனுதாரருக்கு 21.07.2017 அன்று உடல் தகுதிக்கான சான்று வழங்கியதை சுகாதார அலுவலர் மற்றும் ஆணையரை சந்தித்து நேரில் வழங்காமல் தபால் பெட்டியில் போட்டுவிட்டு பணிக்கு வராமல் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டார் எனத்தெரிவித்துள்ளார். மேலும், 2015–ஆம் ஆண்டில் முன் அனுமதியின்றி பணிக்கு வராத நாட்களை யாருக்கும் தெரிவிக்காத நிலையில் தற்காலிகப் பணிநீக்கத்தில் இருந்த இளநிலை உதவியாளர் ஆ. ஜாகீர் உசேன் என்பவருடன் சேர்ந்து, சி–1 எழுத்தராக அவர் பொறுப்பில் இல்லாத நிலையில் அவரே கையொப்பமிட்டு ஆணை பெற்றது போல செயல்முறை ஆணை இன்றி ஊதியப்பட்டியல் தயாரித்த நிலையில் தணிக்கைக்கு அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். மேலும், இதற்கான ஆதார ஆவணங்களையும் விசாரணையின்போது சமர்ப்பித்துள்ளார்.

3. சிவகங்கை நகராட்சி பொறுப்பு ஆணையாளரும் எதிர்மனுதாரருமான நகராட்சிப் பொறியாளர் திரு பா. அய்யனார் அவர்களிடம் 26.09.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் பரமக்குடி நகராட்சியிலிருந்து மாற்றலாகி சிவகங்கை நகராட்சியில் பணியில் சேர்ந்தார் என்றும், பரமக்குடி நகராட்சியில் பணிபுரிந்தபோது வேலைக்கு செல்வதில்லை என்றும் மதம் பரப்பும் வேலையில் ஈடுபடுவார் என்றும் நகராட்சி ஆணையர் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், 2015–ஆம் ஆண்டு 180 நாட்கள் பணிக்கு வராதது, தற்காலிக பணிநீக்கத்தில் இருந்த இளநிலை உதவியாளர் திரு ஜாகீர் உசேன் என்பவருடன் சேர்ந்து முறைகேடான செயல்களில் ஈடுபட்டதையும் குறிப்பிட்டார். மது அருந்தி விட்டு அலுவலகத்திற்கு வரும் வழக்கத்தினைக் கொண்டிருந்த இளநிலை உதவியாளர் திரு ஜாகீர் உசேன் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட பின்பு அவருடன் சேர்ந்து மேலாளர் திரு சுரேஷ்குமார் அவர்களை பழிவாங்கும் நோக்கத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மூன்றாம் நபரை பற்றி கேள்விகள் கேட்டு அவரை மிரட்டி உள்ளார் என்றும் தெரிவித்தார். மேலும், இளநிலை உதவியாளர் திரு ஜாகீர் உசேன், உதவியாளர் ஆனந்த் மற்றும் புள்ளிவிவர குறிப்பாளர் திரு பரந்தாமன் ஆகியோர் தற்காலிகப் பணிநீக்கத்தில் உள்ளனர் என்றும் அவர்களுடன் சேர்ந்து ஆணையாளர்களை மிரட்டும் வகையில் நடந்து கொள்வதால் எந்த ஆணையாளரும் சிவகங்கை நகராட்சி ஆணையர் பொறுப்பினை ஏற்கத் தயங்குகின்றனர் என்றும் மனுதாரர் நகராட்சியில் வாகன ஓட்டுநராக பணியேற்றபின் மூன்று ஆணையாளர்கள் பணி இடமாறுதல் பெற்று வேறு நகராட்சிக்கு சென்று விட்டனர் என்றும் பொறுப்பு ஆணையர் திரு பா. அய்யனார் தெரிவித்தார். 21.07.2017 பணியில் சேருவதற்கு வழங்கப்பட்ட உடல் தகுதிக்கான சான்றிதழைப் பெற்றும், விசாரணை மேற்கொள்ளப்படும் இன்றைய நாள்வரை பணியில் சேரவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

4. மருத்துவ தகுதிச் சான்றிதழ் பெற்றபின்பு தன்னை மனுதாரர் சந்திக்கவில்லை என்று நகராட்சியின் சுகாதார அலுவலர் திரு எஸ். விஜயகுமார் விசாரணையின்போது தெரிவித்தார். மனுதாரர் பணிக்கு வருவதில்லை என்றும் மதபோதகப் பணியில் ஈடுபட்டுள்ளார் என்பதை கேள்விப்பட்டதாகவும் குறிப்பிட்டு சுகாதார துறையில் மனுதாரர் வாகன ஓட்டுநராக பணிபுரியவேண்டும் என்றும் ஆனால் பணியில் சேருவதற்கான ஆர்வமும் அக்கறையும் அவரிடம் இல்லை என்றும் சுகாதார அலுவலர் திரு எஸ். விஜயகுமார் விசாரணையின்போது குறிப்பிட்டார்.

5. முறையீட்டு மனுதாரரிடமும் 26.09.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 01.05.2015 அன்று சிவகங்கை நகராட்சியில் பணிக்கு சேர்ந்த தனக்கு இரண்டு மாதங்கள் வாகனம் எதுவும் வழங்கவில்லை என்றும் பின்பு பழுதடைந்த வாகனத்தை பழுது பார்த்து இயக்கி கொள்ளுமாறு வாய்மொழியாக உத்தரவிட்டனர் என்று மனுதாரர் விசாரணையின்போது தெரிவித்தார். 01.10.2015 அன்று பத்து நிமிடம் தாமதமாக வந்ததற்கான காரணத்தைக் குறிப்பிட்டும், வருகைப் பதிவேட்டில் வரவில்லை என பதிவு செய்தனர் என்றும். இதன் தொடர்ச்சியாக நான்கு மாதங்கள் பணிக்கு வரவில்லை என்றும் பதிவு செய்தனர் எனக்குறிப்பிட்டார். நான்கு மாத விடுப்புச் சம்பளம் ஏன் மேலாளர் தர மறுக்கின்றார் என முன்னாள் ஆணையாளர் திரு சங்கரன் தன்னிடம் கோரியதாகவும் அதற்கு திரு ஜாகீர் உசேன் மூலமாக மேலாளர் திரு சுரேஷ்குமார் 20 சதவிகிதம் கையூட்டு தன்னிடம் கோரினார் எனவும் அதனை எழுத்து மூலமாக தெரிவித்ததை அறிந்து தனக்கும் மேலாளருக்கும் வாய்தகராறு ஏற்பட்டு கைகலப்பில் முடிந்தது எனவும் விசாரணையின்போது மனுதாரர் குறிப்பிட்டார். மருத்துவ தகுதிச் சான்றிதழ் கொடுத்து 21.07.2017 அன்று பணியில் சேர ஆணையாளரை சந்திக்க சென்றதாகவும், கடிதத்தைப் பெற்றுக் கொண்டு வெளியே போங்கள் என்று சொல்லிவிட்டார் எனவும் குறிப்பிட்டார். எனினும் தான் உடனடியாக வேலையில் சேருவதற்கு தயாராக உள்ளதாகவும் விசாரணையின்போது மனுதாரர் தெரிவித்தார்.

6. மனுதாரர் முறையீடு சம்பந்தமாக விசாரணையின்போது அவர் அளித்த வாக்குமூலம் எதிர்மனுதாரர்களின் அறிக்கை மற்றும் வாக்குமூலங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. மனுதாரர் பரமக்குடி நகராட்சியில் வாகன ஓட்டுநராகப் பணி நியமனம் செய்யப்பட்டு 2015–ஆம் ஆண்டு பணி இடமாற்றம் பெற்று சிவகங்கை நகராட்சியில் 01.05.2015 அன்று பணியில் சேர்ந்துள்ளார். சிவகங்கை நகராட்சியில் பணியில் சேர்ந்த நாள்முதலே பிரச்சினைகள் ஏற்பட்டு முதல் கோணலே முற்றும் கோணலாகி விட்டது. மதபோதகப் பணியில் ஈடுபட்டு, பணிக்கு முறையாக செல்லாததே சிவகங்கை நகராட்சிக்கு பணி இடமாறுதல் செய்யப்பட்டதற்கான காரணம் என அறிய முடிகிறது. அலுவலக பணி நேரங்களைத் தவிர்த்து மற்ற நேரங்களில் மனுதாரர் மதபோதகப் பணியில் ஈடுபடுவது குற்றம் எனக் கூற இயலாது. எனினும், "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற பழமொழிக்கேற்ப தான் பொறுப்பேற்றுள்ள பணிக்கு எந்தவிதக் குந்தகமும் ஏற்படாவண்ணம் மனுதாரர் செயல்பட்டிருந்தால் இந்த மாதிரியான பிரச்சினைகள் மனுதாரருக்கு ஏற்பட்டிருக்காது. மேல் அதிகாரிகளுக்கு மனுதாரர் கீழ்படியாமை மற்றும் குற்றம் சாட்டப்பட்ட பிற அலுவலர்களின் துணையுடன் poke one's nose என்ற சொற்றொடரின்படி மேலாளர் பணியின் விவரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோருவது போன்ற முறையற்ற செயல்களில் ஈடுபட்டதுடன் அலுவலகத்தில் பிற அலுவலர்கள் முன்னிலையிலேயே மேலாளருடன் வாய் தகராறில் தொடங்கி கைகலப்பில் முடிந்ததும் கண்டிக்கத் தக்கது எனினும் மனுதாரரின் முறையீட்டினை மனிதாபிமானத்துடன் இம்முறைமன்ற நடுவம் ஆய்வு செய்தது. விசாரணை மேற்கொண்ட 26.09.2017–ஆம் நாளுக்கு மறுதினமே மனுதாரரை பணியில் சேர அனுமதிக்குமாறு நகராட்சி ஆணையர் மனுதாரர் முன்னிலையில் அறிவுறுத்தப்பட்டார். மனுதாரர் 27.09.2017 அன்று பணிக்கு வர இயலாத நிலையில் அதற்கான காரணத்தை ஏற்றுக்கொண்டு 28.09.2017 அன்று காலை 6 மணிக்கு பணியில் சேர அறிவுறுத்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சிவகங்கை நகராட்சி முதல் மண்டல பொது சுகாதாரப்பிரிவிற்கு சென்று மனுதாரர் பணிபுரிவதை நகராட்சி ஆணையாளரும், துப்புரவு அலுவலரும் ஆய்வு செய்துள்ளனர். அப்பொழுது மனுதாரர் குப்பை வண்டி அருகில் நின்று பணிபுரிவதை தவிர்த்து தான் குப்பை வண்டி ஓட்டுநர் என்பதை வெளிப்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதற்காகப் பணி நடைபெறும் இடத்திலிருந்து நீண்ட தூரம் சென்று நின்று கொண்டதை கண்டறிந்துள்ளனர். மேலும், துப்புரவுப் பணியாளர்களுடன் சேர்ந்து நிற்பது கௌரவக் குறைச்சலாகக் கருதாமல் பணியாளர்கள் சிரமமின்றி பணி புரிவதற்கு ஏதுவாகக் குப்பை அள்ளும் வாகனம் அருகிலும், வண்டியிலும் அமர்ந்து பணிபுரிய வேண்டுமென

மனுதாரருக்கு அறிவுறுத்தியுள்ளனர். துப்புரவுப் பணியாளர்கள் பொது சுகாதாரப் பணியினை மேற்கொண்டு வருகின்றனர். பணியாளர்கள் சுகாதாரப் பணியில் ஈடுபட்டுள்ளபோது வாகனத்துடன் ஓட்டுநர் அருகில் இல்லாமல் தொலைவில் நிற்பது முறையற்றது. அவரது வாகன ஓட்டுநர் பணியினை கடமையுணர்வுடன் செயலாற்றவேண்டும் என மனுதாரரை இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது. மேலும், மனுதாரர் விடுப்பில் இருந்த நாட்களை வரன்முறைப்படுத்துவது, நிலுவைத்தொகை, மனுதாரர் கோரியுள்ள ஊதிய உயர்வு மற்றும் பயணப்படிகள் வழங்குவது குறித்து விதிமுறைகளுக்குட்பட்டும், தணிக்கைத் துறை மற்றும் மேலதிகாரிகளின் ஒப்புதல் பெற்றும் உரிய ஆணைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென சிவகங்கை நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், மனுதாரர் அவர் மேற்கொண்டுள்ள ஓட்டுநர் பணிச் சேவையில் ஏற்படும் குறைபாடுகளைத் தவிர்க்க உறுதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமெனவும் நகராட்சிக்கு ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது. தற்காலிக பணி நீக்கத்தில் உள்ள உதவியாளர் திரு ஜாகீர் உசேனுடன் சேர்ந்து கொண்டு போலி பதிவுகளை உருவாக்கியது, பணிப்பதிவேட்டில் திருத்தம் செய்தது போன்ற சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டது குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர் மீதும் சட்டபூர்வ குற்றவியல் நடவடிக்கையினையும் மேற்கொள்ளுமாறு ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 2 – ஆம் நாள், என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப் படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **திரு அ. சேவியர் ஜோசப்,**
   **எண்.2/787, வடக்குத் தெரு,**
   **சூசையப்பர் பட்டணம், காளையார் கோவில் அஞ்சல்,**
   **சிவகங்கை மாவட்டம்.**

2. **நகராட்சி ஆணையர்,**
   **சிவகங்கை நகராட்சி,**
   **சிவகங்கை மாவட்டம்.**

3. **நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,**
   **மேலக்கால் வீதி, கோச்சடை, மதுரை.**

4. **நகராட்சி நிர்வாக ஆணையர்,**
   **சேப்பாக்கம், சென்னை – 5.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்